| | | |
|---|---|---|
| **O.S No.** | : | 71/2021 |
| **DATE** | : | **12.03.2026** |
| **பெயர்** | : | **ஆனந்தன்** |
| **தந்தை பெயர்** | : | **விஜயராகவன்** |

**பிரதிவாதி தரப்பு வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. பிரதிவாதிகள் பச்சயைப்பன் என்பவரிடம் இருந்து தாவா சொத்தை கிரையம் வாங்கினார்கள். பச்சயைப்பன் என்னிடம் சொல்லாமல் விற்றுவிட்டார் என்றால் அவர் என்னிடத்தில் சொல்லவேண்டிய அவசியமில்லை. சொந்த ஊரை விட்டு பொதுவாக வேலை காரணமாக 4,5 நாட்கள் வெளியூர் செல்வேன். கட்டிடம் வளத்தி கட்டுவதாக சொல்லப்படும் காலகட்டத்தில் நான் ஊரில் இல்லை. எந்த வருடம் என்றால் 2021. நான் நெசவு தொழில் செய்து வருகிறேன். ஊரில் பஞ்சாயத்து நடந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் எந்த வருடம் என்றால் 2021. மேற்படி வருட விவரத்தை எனது பிராதில் குறிப்பிட்டு சொல்லாததற்கு காரணம் என்னவென்றால் நான் சொல்லும்போது கொஞ்ச நாட்களுக்கு முன்பு என்று தெரிவித்திருந்தேன்.

4. பிரதிவாதிகளுக்கு பட்டா உள்ளதா என்ற விவரம் எனக்கு தெரியாது. பிராதில் பிரதிவாதிகள் எனது இடத்தையும் சேர்த்து பட்டா கேட்கிறார்கள் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் அந்த விவரம் சரிதான். எந்த ஆவணங்களின் அடிப்படையில் மேற்படி பிரதிவாதிகள் பட்டா கேட்கிறார்கள் என்று சொல்கிறேன் என்றால் ஆக்கிரமிப்பு செய்தவர்கள் அவ்வாறு செய்வார்கள் என்ற யூகத்தின் அடிப்படையில் சொல்கிறேன். வா.சா.ஆ.8 ஆட்சேபனை மனுவில் உள்ள விவரங்கள் சரிதான். நான் சொல்லும் காலி இடம் எனது பட்டாவில் வருகிறதா என்றால் வருகிறது. வா.சா.ஆ.8 ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டது. அதில் 3 அடி எனது சொத்து பட்டாவில் சேர்க்கப்படவில்லை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் 1 ½ அடி

தான் எனக்கு வரவேண்டியிருந்தது அதற்காக தான் கிராம நிர்வாக அலுலவரிடம் சென்று வந்தேன்.

5. வா.சா.ஆ–7, வா.சா.ஆ.8 தடைமனுவும், ஆட்சேபனை மனுவும் ஒரே காலகட்டத்தில் தான் கொடுக்கப்பட்டது. பிரதிவாதி நான் ஆட்சேபனை செய்வதற்கு முன்பு இடத்தை ஆக்கிரமிப்பு செய்ய தான் முயற்சித்தார்கள் பதிவு துறையில் எந்த முயற்சியும் செய்யவில்லை. பிரதிவாதிகளின் கிரைய பத்திரத்தை வாங்கி பார்த்துள்ளேன். அதில் இரண்டு அயிட்டங்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் யார் வாங்கினார்கள் யார் விற்றார்கள் என்ற விவரத்தை தான் பார்த்தேன். மேற்படி பத்திரத்தில் சொத்து விவரத்தை பார்க்காமல் 3 அடி ஆக்கிரமிப்பு செய்ததாக நானே முடிவு செய்துவிட்டேன் என்று சொன்னால் சரிதான்.

6. பிரதிவாதிகளின் சொத்து ஆதியில் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு சொந்தமானது. பிரதிவாதிகள் வளத்தி கட்டியுள்ளதாக சொல்லப்படும் இடம் எனது எல்லைக்குள் வருகிறது. சாட்சியிடம் வா.சா.ஆ.6 மாதிரி வரைபடம் காண்பிக்கப்பட்டது. அதில் EFGH பகுதி எனது சொத்திற்கும் பிரதிவாதி சொத்திற்கும் நடுவில் உள்ளது என்றால் அது என்னுடைய பகுதி தான். நான் பட்டா கேட்டது மேற்படி இடத்திற்கு தானா என்றால் இன்னும் ஒரு அடி தள்ளி கேட்டேன். அது மேற்கில் உள்ளது, அது என்னுடைய இடம் தான் அதில் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள். அது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

7. எனக்கு பத்திரம் உள்ளது. எனது கிரைய பத்திரத்தின் படி வடக்கில் அகலம் 25 அடி, தெற்கில் 22 அடி. மாதிரி வரைபடத்தில் CD முனையில் உள்ள சுவர் யார் கட்டியது என்றால் பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து கட்டினார்கள். சுவர் கட்டும் போது எழுத்து பூர்வமான ஆட்சேபனை செய்தேனா என்றால் இல்லை, பஞ்சாயத்தார்கள் மூலமாக தான் ஆட்சேபனை செய்தேன். பஞ்சாயத்தார்களிடம் எழுத்து பூர்வமாக கடிதம் கொடுக்கவில்லை நாங்கள்

சென்று கூப்பிட்டால் அவர்கள் வந்து பிரச்சனைக்கு பேசுவார்கள். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை, பஞ்சாயத்தாரிடம் தான் சொன்னேன். பிரதிவாதிகள் அதற்கு முன்பே கட்டி முடித்துவிட்டார்களா என்றால் பஞ்சாயத்திற்கு வந்து பதில் சொன்னார்கள் எப்போது செய்து கொடுப்பதாக சொல்லவில்லை.

8. 2016ல் தகராறு ஏதேனும் ஏற்பட்டதா என்றால் தெரியாது. 2019ல் பிரதிவாதிகள் கட்டிடம் கட்ட ஆரம்பித்தார்கள் என்று பிராதில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், அது கடக்கால் மேல் தளம் 2021ல் கட்டினார்கள். 2019ல் இருந்து 2021 வரை அங்கு எந்த வேலையும் நடக்கவில்லை. தற்போது அந்த 4 அடி குறுக்கு சுவரை இடத்தை சுவர் எழுப்பி மூடிவிட்டார்கள். மேற்படி பிரச்சனை அனைத்தும் 2019ல் முடிந்துவிட்டதாக பிராதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் 2021ல் தான் கட்டினார்கள். (நீதிமன்ற குறிப்பு – சாட்சியிடம் கேள்விக்கு நேரடி பதில் சொல்லிவிட்டு பின்னர் தான் சொல்ல விரும்பும் அதிகபட்ச விவரங்களை தெரிவிக்கலாம் என்று சொல்லிய போதும் சாட்சி சரி தவறு என்ற பதில்களை சொல்லாமல் விவரங்களை மட்டும் தெரிவித்து வருகிறார்.)

9. எனது வீட்டில் இருந்து 4 அடிக்கு வருவதற்கு வேறு ஏதேனும் வழி உள்ளதா என்றால் செடி, கொடிகள் உள்ளது, வழி இருந்தது. அந்த வழியை மாதிரி வரைபடத்தில் ஏன் காட்டவில்லை என்றால் அது சாதாரண வழி. மாதிரி வரைபடத்தில் அந்த மாதிரி வழி எதுவும் காட்டப்படவில்லை என்றால் தெரு வழியாக தான் அந்த இடத்திற்கு வரவேண்டும். 4 அடிக்கு எனது சுவாதினத்தை காட்டுவதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது பத்திரத்திலேயே 25 அடி என்று உள்ளது, பட்டாவிலும் உள்ளது. எனது இடத்தில் ஏற்கனவே இருந்த வீட்டை தான் வாங்கி வந்தேன். என்னுடைய வீடு கட்டும் போது மேற்கில் உள்ள BC சுவர் அவ்வாறே தான் இருந்தது.

10. சுவரை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்று பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு ஏதாவது அனுப்பினேனா என்றால் பஞ்சாயத்தாரிடம் தான் முதலில் சென்று சொன்னேன். எனது பத்திரத்தில் கிருஷ்ணப்ப நாயக்கரின் வீடு தான் மேற்கில் எல்லையாக காட்டப்பட்டுள்ளது. நான் தாவா சொத்தை வாங்கும் போது அளந்து பார்த்து தான் வாங்கினேன். எனது பத்திரத்தில் மேற்கில் 3 அடி காலி இடம் உள்ளது என்று குறிப்பிடாததற்கு காரணம் என்னவென்றால் தெரியவில்லை.

**கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

FANNY RAJAN

Principal District Munsif,
Kancheepuram
Digitally signed by
FANNY RAJAN
Date: 2026.03.12
19:17:05 +0530